யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 11
**First Term Examination – 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் இலக்கிய நயம் | 48 | T | I, II, III | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் **Index No**

## தமிழ் இலக்கிய நயம்

**பகுதி I இல் 01, 02 ஆகிய இரு வினாக்களுக்கும் பகுதி – II இல் 03ஆம் வினாவுக்கும் பகுதி III இல் 04, 05, 06, 07 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி - I

01. (i) தொடக்கம் (v) வரையான வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(i) மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது ஓச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி

அ. இவ் அடிகளில் காட்டப்பட்டுள்ள சோழ மன்னனின் பெருமையும் ஆட்சிச் சிறப்பும்?
ஆ. இங்கே கன்னி தன்னைப் புணர்ந்தாலும்'' என்பதன் மூலம் கூற விழைவது யாது?

(ii) என்றும் அடிமைச்சிறையினிலே வைத்த
எத்தர்கள் கொட்டம் அடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்

அ. இப்பாடலில் குறிப்பிடப்படும் அணியினை விளக்குக.
ஆ. யாருடைய கொட்டம் அடக்கப்படவேண்டும் எனக் கவிஞர் கூறுகின்றார்?

(iii) ''சிரல்வாய் வனப்பினவாகி நிரலொப்ப
ஈர்ந்தண்டளந் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழை மதர்க்கட் சின் மொழிப் பேதையூர்''

அ. ''ஈர்தண் தளவம்'' என்பதன் பொருளைத் தருக.
ஆ. ''சின்மொழிப் பேதையூர்'' என்பதனை விளக்குக.

(iv) ''அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து''
அ. இக்குறளின் பொருளை உமது மொழி நடையில் எழுதுக.
ஆ. தலைவியின் அழகு சிறப்பிக்கப்படும் விதத்தினை தெளிவுறுத்துக.

(v) “ஒன்ன.. பஜாரில பாத்தன் காணல்ல! ஒனக்கு
வெளிநாட்டுக்கு கடிதமொண்டு இருக்கி...!”

அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. ஒன்ன, பாத்தன், இருக்கி என்ற சொல்லின் சரியான எழுத்து வடிவம் யாது?

(5x4=20 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள பாடல் பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் - அது ஓச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
<u>கங்கை தன்னைப் புணர்ந்தாலும்</u>
<u>புலவாது ஒழிதல் கயற் கண்ணாய்</u>
மங்கை மாதர் பெருங்கற்பு என்று
அறிந்தேன் வாழி காவேரி

மன்னு மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோலது ஓச்சி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கன்னி தன்னைப் புணர்ந்தாலும்
புலவாதொழிதல் கயற் கண்ணாய்
மன்னுமாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி

1. இப்பாடல் யாருடைய கூற்றாக எவ்விலக்கியத்தில் பாடப்பட்டுள்ளது?
2. இங்கு கூறப்பட்டுள்ள அரசன் யார்? அவனது சிறப்புக்கள் எவை?
3. இங்கு இடம்பெற்ற அணியை இனங்கண்டு விளக்குக?
4. அடிக்கோடிட்ட பாடற் பகுதிகளினூடாக வெளிப்பட்டிருக்கும் உட்கருத்து யாது?
5. “மன்னு மாதர் பெருங்கற்பென்று” என்பதன் பொருளை விளக்குக.

(5x5=25 புள்ளிகள்)

## பகுதி – II

03. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு பூரணமான விடை எழுதுக

குடும்பத்தில் தந்தை என்று வாழ்கின்ற ஒருவருக்கு சில உரிமைகள் உண்டு. ஆனால் பொருள் வருவாய்க்கு உழைத்தல், குடும்பத்தைக் காப்பாற்றுதல் போன்ற கடமைகளும் அவருக்கு உண்டு.மகனுக்கும் சில உரிமைகள் உண்டு. தன் பெற்றோருக்கு கட்டுப்பட்டு ஒழுங்காக நடக்கவேண்டும், ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகப் படிக்கவேண்டும்: இவ்வாறு மகனுக்கும் சில கடமைகள் உண்டு. அலுவலகத்தில் அல்லது தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு ஊதியம் பெறுதல், விடுமுறை பெறுதல், மருத்துவ வசதி பெறுதல் முதலிய உரிமைகள் உண்டு : அங்கே நேரத்துடன் சென்று குறிப்பிட்ட வேலைகளை ஒழுங்காகச் செய்யும் கடமைகளும் உண்டு.

உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பி கடமையைப் புறக்கணித்தால் குழப்பம் தான் மிஞ்சும்: உள்ள உரிமையும் நிலைக்காது. இன்று உலகத்தில் பல பகுதிகளில் உள்ள சீர்கேடுகளுக்கும் குழப்பங்களுக்கும் இந்தத் தவறுகள் தான் காரணம். பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள். கடமையில் கருத்துச் செலுத்துவது குறைகின்றது. அலுவலகம், தொழிற்சாலை முதலியவை மட்டும் அல்ல: குடும்பமும் அப்படித்தான். எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து கடமையை புறக்கணிக்கின்றார்களோ அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும். உரிமைப் போராட்டம்

வளர்ந்தால் கணவன் மனைவி பூசல் வளரும். மக்கள் ஒழுங்காக நடக்கமாட்டார்கள்: காதல், கற்பு முதலியவற்றிற்கு இடம் இருக்காது.

1. நாணயத்தின் இருபக்கங்களாகக் கருதப்படுபவை எவை?
2. கணவன் மனைவிக்கு இடையே பூசல் ஏற்படக் காரணம் யாது?
3. மகனுக்குரிய கடமைகள் எவை?
4. இன்று உலகில் குழப்பங்கள் ஏற்படக்காரணம் யாது?
5. தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமைகள் எவை?

(5x5=25 புள்ளிகள்)

## பகுதி – III

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக**

04. ‘‘புத்தகசாலை’’ என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு கவிஞர் காண விழையும் நூலகம் எத்தகையது என்பதை விளக்குக.

05. ‘‘கிட்கிந்தைப் படலம்’’ என்ற பாடத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்குமணனை எதிர் கொண்ட தாரை, அவனைப் புகழ்ந்து கூறுதல் காட்டப்படுமாற்றை விளக்குக.

06. ‘‘எலியம்’’ எனும் பாடத்தை ஆதாரமாகக் கொண்டு எலிகளை ஒழிக்க மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றிய விபரிப்பில் இழையோடும் அங்கதச் சுவையினைச் சுருக்கமாக விளக்குக.

07. ‘‘தெளிவு’’ என்ற சிறுகதையில் குடும்ப வாழ்வின் இன்ப துன்பங்களை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். தெளிவு படுத்துக.

(2x15=30 புள்ளிகள்)